# அன்பு மனங்கள் வாழ்க

அன்பு மனங்கள் வாழ்க
அமரும் விருந்து வாழ்க
சொந்தமாகும் உறவினிலே
சுடரும் யேசு வாழ்க - 2

**1**
ஏழை உள்ளம் எங்கும் எழுச்சி கீதம் முழங்கும்
எழுந்து நிமிர்ந்து உயரும் நல்ல நேசக் கரங்கள் இணையும்
பார்வைகள் (உயர்ந்திட-2)
பாசங்கள் (மலர்ந்திடும் - 3
பகிர்ந்திடும் விருந்து வாழ்க
உயர்ந்திடும் மனிதம் வாழ்க

**2**
சுமைகள் தாங்கும் மனங்கள் விரிந்து வானில் பறக்கும்
இமைகள் இழந்த விழிகள் கவலை நீங்கி களிக்கும்
யேசுவில் (இணைந்திட-2)
இன்னல்கள் (தீர்ந்திடும் - 3)
நலம் தரும் விருந்து வாழ்க –
மாநிலமே வாழ்க

**3**
பாதை தேடும் பொழுதில் பசுமை வாழ்வில் தெரியும்
எழுச்சி ஓங்கும் போது ஒரு புதிய உலகம் பிறக்கும்
பணிகள் ( மலர்ந்திட-2 )
புது யுகம் ( மலர்ந்திடும் - 3 )
மலர்ந்திடும் கனவுகள் வாழ்க
புலர்ந்திடும் அரசு வாழ்க